# 14 சிறுவர் தினம்

## செயற்பாடு 1

**குழுவாக இணைவோம். பத்திரிகைச் செய்தியை அவதானிப்போம். கலந்துரையாடுவோம். வாசிப்போம்.**

# தினகரன்

**இன்றைய சிறுவர்களே**
**நாளைய தலைவர்கள்**
**-கண்டி வலயக் கல்விப் பணிப்பாளர்.**



""இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். இவர்களின் எதிர்காலத்தைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். '' என வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த அக்டோபர் முதலாம் திகதி கண்டி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் சிறுவர் தின விழா நடைப்பெற்றது. விழாவின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

காலை 10.00 மணிக்கு விழா ஆரம்பமானது. அதிபர் த.ஶ்ரீதரன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

## செயற்பாடு 2

**சுருக்கமாக விடை எழுதுவோம்.**

1. இச் செய்தி எந்த விழா பற்றியது?
2. இவ்விழா எங்கு கொண்டாடப்பட்டது?
3. இவ்விழாவுக்கு தலைமை தாங்கியவர் யார்?

## செயற்பாடு 3

குழுவாக இணைவோம்.எங்கள் பாடசாலையில் நடைபெற்ற சிறுவர் தின விழா பற்றி கலந்துரையாடுவோம். குழு நிலையில் முன்வைப்போம்.

## செயற்பாடு 4

**உங்கள் பாடசாலையில் நடைபெறவுள்ள சிறுவர் தின நிகழ்வுக்கு பின்வரும் அழைப்பிதழைப் பூரணப்படுத்துவோம்.**

**சிறுவர்தின விழா - 2017**

எமது பாடசாலை சிறுவர் தின விழா 1. ______________ திகதி 2.______________ மணிக்கு 3.______________ நடைபெறும் இவ்விழாவில் பிரதம அதிதியாக 4.______________ கலந்து சிறப்பிப்பார். உங்கள் அனைவரையும் வருக! வருக! எனஅன்புடன் அழைக்கின்றோம்.

விழா ஏற்பாட்டுக் குழு.

## செயற்பாடு 5 (36)

**ஆசிரியரின் உதவியுடன் பின்வரும் அழைப்பிதழைச் செவிமடுப்போம். வாசிப்போம்.**

# சிறுவர் தின விழா-2017

**ம/மா/ விக்னேஷ்வராக் கல்லூரி கண்டி.**

திரு/ திருமதி/செல்வன்/ செல்வி ...................

இடம் - பிரதான மண்டபம்

திகதி - 01.10.2017

நேரம் - மு. ப 8.30

தலைமை - திரு. க. ஶ்ரீதரன் அதிபர்

**நிகழ்ச்சி நிரல்**

- மங்கல விளக்கேற்றல்.
- வரவேற்பு உரை - **பிரதி அதிபர்**
- வரவேற்பு நடனம் - **கல்லூரி மாணவர்கள்**
- சிறுவர் நாட்டின் கண்கள் - பேச்சு - **செல்வி கா.ஜனனி – தரம் 05**
- பாடல் - **தரம் 6 மாணவர்கள்**
- எமது உரிமை - நாடகம் - **தரம் 8 மாணவர்கள்**
- சிறப்பு உரை - **கல்லூரி அதிபர்**
- குழு நடனம் - **தரம் 7 மாணவர்கள்**
- விவாதம் - **தரம் 9 மாணவர்கள்**
- நன்றி உரை – **உதவி அதிபர்**

**உங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்கிறோம்.**

**விழா ஏற்பாட்டுக் குழுவினர்.**

## சொல்அறிமுகம்

| | | |
|---|---|---|
| தலைவர்கள் | - | නායකයෝ |
| பணிப்பாளர் | - | අධ්‍යක්ෂ |
| தலைமையில் | - | ප්‍රධානත්වයෙන් |
| நிகழ்ச்சி நிரல் | - | වැඩසටහන් විස්තරය |
| வரவேற்பு உரை | - | පිළිගැනීමේ කතාව |
| உரிமைகள் | - | අයිතිවාසිකම් |
| கடமை | - | වගකීම |
| சுதந்திரமாக | - | නිදහසේ |
| முக்கியமானவர்கள் | - | වැදගත් පුද්ගලයින් |
| எம்மத்தியில் | - | අප අතර |

## செயற்பாடு 6

37

**விடை கூறுவோம்.**

1. விழா ஆரம்பிக்கும் நேரம் என்ன?
2. வரவேற்பு நடனம் வழங்குபவர்கள் யாவர்?
3. வரவேற்பு உரை நிகழ்த்துபவர் யார்?
4. தரம் 8 மாணவர்கள் வழங்கும் நிகழ்ச்சி எது?
5. சிறப்பு உரை நிகழ்த்துபவர் யார்?

## செயற்பாடு 6 37

**ஆசிரியர் உதவியுடன் பாடலைச் செவிமடுப்போம். குழுவாகப் பாடுவோம்.**

### புதிய உலகை செய்திடுவோம்

சின்னஞ் சிறிய சிறுவர் - நாம்
சிரித்துக் குலுங்கும் பூக்கள் நாம்
நாளை உலகம் மலரவே
மலர்ந்து சிரிக்கும் மலர்கள் - நாம்

தினமும் கல்வி கற்கவே
பள்ளிக்கூடம் செல்கிறோம்
கல்வி கற்கும் சாலையில்
கலைகள் பலவும் கற்கிறோம்.

உரிமை தந்து எம்மையே
உயிரைப் போல காத்திடும்
உயர்ந்த மனிதர் எம்மையையே
உயர்த்தி வைத்து ரசித்திடும்

நாளை உலகம் மலருமே
நமது கையில் தவழுமே
வீறு கொண்டு எழுந்து - நாம்
புதிய உலகை செய்திடுவோம்.

## சொல்அறிமுகம்

| | |
|---|---|
| குலுங்கும் | - සෙලවෙන /සැලෙන |
| மலரவே | - පිපෙන්න |
| மலர்ந்து | - පිපී |
| தினமும் | - දිනපතා |
| கல்வி கற்கும் சாலை | - පාසල |
| உயர்ந்த | - උසස් |
| வீறு | - ගාම්භීර ව |
| கலைகள் | - කලාවල් |

## செயற்பாடு 7

**சோடிகளாக இணைவோம். பாடசாலையில் ஆசிரியர் தின விழாவுக்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயாரிப்போம்.**



## செயற்பாடு 8 (38)

### செவிமடுப்போம். வாசிப்போம்.


மலாலா


ஆன் பிராங்க்


குற்றாலீஸ்வரன்

சுதந்திரமாகப் பிறந்த மனிதன் சுதந்திரமாக வாழ வேண்டும். மனிதன் சுதந்திரமாக வாழ அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இதில் சிறுவர் உரிமைகள் மிகவும் முக்கியமானவை. 18 வயதிற்கு உட்பட்ட அனைவரும் சிறுவர்கள். உலக சனத்தொகையில் 1/3 பங்கு சிறுவர்கள். சமூகத்தில் சிறுவர்கள் மிகவும் முக்கியமானவர்கள். சாதனை படைத்த சிறுவர்கள் பலர் எம்மத்தியில் உள்ளனர்.

சிறுவர் கல்வி கட்டாயமானது. சிறுவர்கள் வேலைக்கு அமர்த்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. சிறுவர்களின் கருத்துகளுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளித்தல் எமது கடமை. உலக சிறுவர் தினம் அக்டோபர் 01 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

## செயற்பாடு 9

**இடைவெளிகளை நிரப்புவோம்.**

1. ______________ வயதிற்கு உட்பட்டவர்கள் சிறுவர்கள் எனப்படுவார்கள்.

2. உலக சனத்தொகையில் ______________ பங்கு சிறுவர்கள்.

3. சிறுவர் தினம் அக்டோபர் மாதம் ______________ கொண்டாடப்படுகிறது.

## செயற்பாடு 10

**படங்களை அவதானிப்போம். கலந்துரையாடுவோம். விருப்பமான ஒருவர் பற்றி எழுதுவோம்.**



பெயர் - மலாலா யூசப்சையி

நாடு - பாகிஸ்த்தான்

சாதனை - 2014ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு



பெயர் - ஆன் பிராங்க்

நாடு - ஜேர்மனி

சாதனை - ஒரு இளம் பெண்ணின் நாட்குறிப்பு (1947)

The Diary of a young Girl



பெயர் - குற்றாலீஸ்வரன்

நாடு - இந்தியா - தமிழ் நாடு

சாதனை - 1994 ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்தார்.

## செயற்பாடு 11

**பொருத்தமான தினங்களை இனங்காண்போம். இணைப்போம்.**

1


மகளிர் தினம்

2


உலக சுற்றாடல் தினம்

3


முதியோர் தினம்

4


அன்னையர் தினம்

5


ஆசிரியர் தினம்

6


தந்தையர் தினம்

## செயற்பாடு 12

**சோடிகளாகஇணைவோம். வேறு தினங்களைக் கண்டறிவோம். எழுதுவோம்.**



## செயற்பாடு 13

**உதாரணத்தை அவதானிப்போம். இடைவெளி நிரப்புவோம்.**

**அம்மா, அப்பா, மாலா, அக்கா, அண்ணா**

1. அம்மாவோடு போகிறேன்.
2. ________________ வருகின்றேன்.
3. ________________ விளையாடுகின்றேன்.
4. ________________ சமைக்கின்றேன்.
5. ________________ படிக்கின்றேன்.

**தம்பி, தங்கை, சித்தி, மாமி, வாணி**

6. மாமியோடு போகின்றேன்.
7. ________________ வருகின்றேன்.
8. ________________ விளையாடுகின்றேன்.
9. ________________ சமைக்கின்றேன்.
10. ________________ படிக்கின்றேன்.

சிறுவர்கள், அதிபர், மாணவர்கள், நண்பர்கள்

11. சிறுவர்களோடு விளையாடுகின்றேன்.

12. ________________ படிக்கின்றேன்.

13. ________________ கதைக்கின்றேன்.

14. ________________ சாப்பிடுகின்றேன்.



# செவிமடுப்போம் உச்சரிப்போம்

39



கல்விப் பணிப்பாளர்

தலைவர்கள்

எதிர் காலத்தை

சிறப்பிப்பார்

அழைக்கின்றோம்

வரவேற்பு

சுதந்திரமாக

உரிமைகள்

சுற்றாடல்

மதிப்பளித்தல்



## දැන් මට පුළුවන්

| | ✓ ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍යයි |
| 1.ප්‍රවෘත්ති පත්‍රයක් කියවා තේරුම් ගැනීම | | | |
| 2. ආරාධනා පත්‍රයක් කියවා අවබෝධ කර ගැනීම | | | |
| 3. ''ඉඩු'' යොදා වාක්‍ය නිර්මාණය කිරීම | | | |
| 4. මෙම පාඩමේ යෙදෙන වචනවලට සවන් දී උච්චාරණය කිරීම | | | |